குருணாகல் மாநகர சபை - 2021

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

குருணாகல் மாநகர சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மாநகர சபை சட்டத்தின் (252 அதிகாரம்) 219 ஆம் பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காண்பிக்கப்பட்டுள்ளன.

குருணாகல் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கவில்லை. இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன்.

### 1.2 அபிப்பிராய மறுப்பிற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் மற்றும் தொடர்பான ஆளுகைத் தரப்பினரின் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு அமைவாக தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

மாநகர சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு ஆளுகைத் தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் மாநகர சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

### 1.4 கணக்காய்வின் விடயப் பரப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்றவை என்பதற்கு நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வு அறிக்கையை வழங்குவதும் எனது குறிக்கோளாகும். நியாயமான உறுதிப்பாடானது உயர் மட்டத்திலான ஒரு உறுதிப்பாடாகக் காணப்படுகின்ற போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எவ்வேளையிலும் பொருண்மையான பிறழ் கூற்றுக்களை வெளிப்படுத்தும் என்பதற்கான ஒரு உத்தரவாதமாக இருக்கமாட்டாது. மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தை ஏற்படுத்துவதன் காரணமாக பொருண்மையான

பிறழ்கூற்றுக்கள் ஏற்படக்கூடியதுடன் இந்நிதிக் கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துபவர்களால் எடுக்கப்படுகின்ற பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கவனித்தல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் மேற்கொள்ளப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் மோசடிகள் ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான தெளிவொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.
- பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத்தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புகளின் வெளிப்படுத்தல்கள் மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்களுக்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் நிகழ்வுகள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளது எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது மாநகர சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது மாநகர சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மாநகர சபை செயற்படுகின்றதா எனவும்

- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கால எல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் கீழே குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் மாநகர சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரிப்பது தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வருமானத் தலைப்பு 50323இன் கீழ் காட்டப்பட வேண்டிய வருடாந்த கடை வாடகை பட்டியல்படுத்தல் ரூபா 10,817,988 ஆகவிருந்த போதும், வருமானச் செலவுக் கணக்கில் மறைப் பெறுமதியான (ரூபா 89,772,914) காட்டப்பட்டிருந்ததன் காரணமாக வருமானம் ரூபா 100,590,902 குறைவாக காட்டப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | மீளாய்வாண்டுடன் தொடர்பான சம்பள மீள்நிரப்பல் ரூபா 230,546,883 ஆகவிருந்த போதும், ரூபா 189,037,082 என காட்டப்பட்டிருந்தமை காரணமாக செலவினம் ரூபா 41,509,801 குறைவாக நிதிக்கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் சீர் செய்வதாகக் குறிப்பிடுகிறேன் | சரியான கணக்குகள் பேணப்படல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டின் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 110,506,203 என கண்டறியப்பட்ட போதும் வருமானச் செலவுக் கணக்கில் ரூபா 14,968,700 என கணக்கிடப்பட்டிருந்ததால் ரூபா 95,537,503 குறைவாக நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது. | | |

| | | |
|---|---|---|
| (ஈ) மீளாய்வாண்டில் நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 4,424,725 ஆகவிருந்த போதும் மறை ரூபா 2,229,075 வருமானச் செலவுக் கணக்கில் காட்டப்பட்டிருந்தமை காரணமாக வருமானம் மற்றும் திரண்ட நிதியம் ரூபா 6,653,800 குறைவாக காட்டப்பட்டிருந்தது.<br><br>(உ) சபைக்குச் சொந்தமான ரூபா 1,948,545 பெறுமதியான 60 டப் கணினிகள் கணக்குகளிலிருந்து விடுபட்டிருந்தமை காரணமாக காரியாலய உபகரணக் கணக்கு மற்றும் மூலதன உள்ளீட்டுக்கு வருமானத்தால் பங்களிப்புச் செய்யும் கணக்கு குறைவாக காட்டப்பட்டிருந்தது. | எதிர்வரும் ஆண்டில் சீர் செய்வதாகக் குறிப்பிடுகிறேன் | சரியான கணக்குகள் பேணப்படல் வேண்டும். |
| (ஊ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று மோட்டார் வண்டிகள் மற்றும் இழுவண்டிகளின் பெறுமதி ரூபா 213,038,000 ஆகவிருந்த போதும், ரூபா 251,621,712 எனக் காட்டப்பட்டிருந்தமை காரணமாக அசையாச் சொத்துக்கள் மற்றும் மூலதன உள்ளீட்டுக்கு வருமானத்தால் பங்களிப்புச் செய்யும் கணக்கு ரூபா 38,583,712 கூடுதலாக நிதிக் கூற்றுகளில் காட்டப்பட்டிருந்தது.<br><br>(எ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியன்று பொது வழங்கல் கடன்கொடுத்தோர் ரூபா 57,133,992 ஆக இருந்த போதும் ரூபா 39,349,168 என ரூபா 17,784,824 குறைத்து நிதிக்கூற்றுக்கிளல் காண்பிக்கப்பட்டிருந்தது | 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்வதாக | சரியாக கணக்குகள் தயாரிக்க்பபட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஏ) | மீளாய்வாண்டின் போது மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அலுவல்கள் அமைச்சின் நிதிஏற்பாட்டின் கீழ் 02 நிர்மாணங்களுக்காக கிடைத்திருந்த ரூபா 21,692,847 ஆன மானியத் தொகை நிதிக்கூற்றுககிளல் மூலதன உதவி மற்றும் முலதனச் செலவினங்களின் கீழ் கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோராக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்கம் செய்வதாக | சரியாக கணக்குகள் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஐ) | மீளாய்வாண்டிற்குரிய இலங்கை வங்கியின் நிலையான வைப்பு வட்டி ரூபா 4,206,376 ஆக இருந்த போதும் ரூபா 11,209,116 என ரூபா 7,002,740 கூடுதலாக கணக்கீடு செய்தமையால் வருமானம் மற்றும் பெறவேண்டிய வருமானம் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது | | |
| (ஒ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சுந்தராப்பொல கழிவுத் தொகுதியில் காணப்பட்ட ரூபா 4,357,008 பெறுமதியான பசளை உரைகள் இருப்பு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 20221 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இறுதி இருப்பாக காண்பிக்கப்படவில்லையென அறிய தருகின்றேன் | சபையின் வெவ்வேறு பிரிவுகளில் காணப்படும் இருப்பு கணக்கிடப்பட வேண்டும். |
| (ஓ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சுநதராப்பொல கழிவுத் தொகுதியில் காணப்பட்ட ரூபா 3,430,000 பெறுமதியான 343 தொன் பசளை இருப்பு நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப் பட்டிருக்கவில்லை. | சுநதராப்பொல பசளை உற்பத்தி பிரிவு வேறான அலகொன்றாக கருதி கணக்கு வைக்கும் தேவைப்பாடு உள்ளது. ஆதலால் எதிர்காலத்தில் அக்கணக்கு நடைமுறையை ஆரம்பிப்பதாக குறிப்பிடுகின்றேன் | சரியாகக் கணக்கிடப்பட வேண்டும். |
| (ஔ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சபையால் 19 வெளித் தரப்பினருக்கு வழக்கு தொடரப்பட்டிருந்ததுடன் | கணக்காய்வில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட பிரகாரம் இந்த நிகழத்தக்க பொறுப்பு அடுத்த நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கு | சரியாக கணக்கு வைத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சபைக்கு எதிராக 07 வெளித்தரப்பினர்களால் வழக்கு தொடரப்பட்டிருந்த போதும் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை . | நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன் | |
| (க) | மீளாய்வாண்டில் 08 கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 123,472,733 தொகை மூலதனமாக்காமை காரணமாக நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டிற்கு வருமானத்தின் பங்களிப்புக் கணக்கு குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | கணக்காய்வில் சுட்டிக் காண்பிக்கப்பட்ட பிரகாரம் எதிர்காலத்தில் சொத்துக்களை மூலதனமாக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகின்றேன். | கட்டிட அபிவிருத்தி செலவினம் மூலதனமாக்கப்பட வேண்டும். |

## 1.6.2 இணங்காத கணக்குகள் மற்றும் அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு சபையால் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள ரூபா 99,325,800 கூட்டுத்தொகையான வருமானத்திற்காக வைப்புக்கள், கேள்வி, நீர் சேவைகள், நானாவித வைப்புக்கள் மற்றம் நானாவித வருமானம் ஆகிய 05 கணக்குகளுக்குரிய மீதிகள் மற்றும் ஆட்டவணைகளில் காணப்பட்ட மீதிகளுக்கு இடையே ரூபா 236,254,053 வேறுபாடு அவதானிக்கப்பட்டது.. | கணக்காய்வின் மூலம் காட்டப்பட்டுள்ள கணக்குப் பிரிவுகளுக்குரிய சரியான அட்டவணைகளை விரைவில் தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டு குறித்த கணக்குகளை சீராக்குவதற்காக நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | மீதிகளின் வேறுபாட்டிற்கான காரணங்களை கண்டறிந்து சீராக்குவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.6.3 கணக்காய்விற்காக எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 3,545,662,131 கூட்டுத்தொகையான சொத்துக்கள், வருமானம், இருப்பு மற்றும் பொறுப்புக்கள் ஆகிய 22 கணக்கு விடயங்கள் கணக்காய்வின் | 2022 ஆம் ஆண்டில் அட்டவணைகளை தயாரித்து விரைவில் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | கணக்கு மீதிகள் மற்றும் கொடுக்கல் வாங்கல்களை உறுதிப்படுத்துவதற்காக போதியளவில் பொருண்மையான |

| | | |
|---|---|---|
| போது திருப்திகரமாக மெய்மையாய்வு செய்ய முடியவில்லை. | | சான்றுகள் கணக்காய்விற்காக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.4 அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

---------------------------------------------------

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | ------------------------- | ------------------- | -------------- |
| (அ) | ரஜபிஹில்ல வாடிவீட்டிலிருந்து 2007 ஆம் ஆண்டிலிருந்து 2019 ஆம் ஆண்டு வரை அறவிடப்பட வேண்டிய ரூபா 5,934,935 தொகை முறையான அங்கீகாரமின்றி கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிருந்தது. | குருணாகல் மாநகர சபையின் ரஜபிஹில்ல வாடி வீட்டை குத்தகைக்கு பெற்றுக்கொண்ட தரப்பினருடன் குறித்த குத்தகை ஆதனங்கள் மற்றும் அறவிடப்பட வேண்டிய பணம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு விசாரணை செய்யப்பட்டு வருகின்றது. | அறவிட வேண்டிய பணத்தை மீண்டும் கணக்குகளுக்கு உள்ளடக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 188 ஆம் பிரிவினால் மேவுகை செய்யப்படாத குருணாகல் மாநகர முதல்வர், முதல்வர்களின் தேசிய மாநாட்டில் தலைவராக இருந்தமையால் நடாத்தப்பட்ட விழாவிற்காக உணவு பானங்களையும் தங்குமிட வசதிகளாக ரூபா 349,980 செலவினமொன்று மாநகர நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது. | இது நிறுவனத்தின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தரின் வேண்டுகோளின் பிரகாரம் உரிய வசதிகளை வழங்கு வதற்காக செலவினங்களை மேற்கொள்ள கௌரவ மாநகர முதல்வரின் ஆலோசனையின் பிரகாரம் GC/06/16/2021/02/10/A/S2 உடைய பொதுச் சபை தீர்மானத்தினால் அங்கீகாரம் கிடைத்துள்ளது. | மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் ''க'' பிரிவில் சமூக ஏற்றுக்கொள்ளல் அல்லது பொது முக்கியம் வாய்ந்த நடவடிக்கைகளுக்காக அந்த ஆலோசனை களுக்கு புறம்பான நடவடிக்கைகளுக்காக செலவினம் மேற்கொள்ள கூடாது. |

## 2. நிதி மீளாய்வு

------------------

### 2.1 நிதி விளைவுகள்

------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவீனத்தை விஞ்சிய வருமானம் ரூபா 759,129,083ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 348,176,000 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

----------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **2.2.1 வீதவரியும் வரியும்** <br> 2019 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை மாநகர சபை அதிகாரப் பிரதேசத்தில் 388 கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் இக்கட்டிடங்களிலிருந்து வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை | 2019 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை 388 கட்டிடங்களை நிர்மாணிப்பதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதும் இணககச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ள கட்டிடங்களுக்காக மாத்திரம் வீதவரி அறவிடப்படுவதாக அறிய தருகின்றேன் | புதிய நிர்மாணங் களுக்காக மதிப்பீடு மேற்கொண்டு வீதவரி அறவிடப்பட வேண்டும் |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

--------------------------------

## 3.1 செயலாற்றல்

------------------

மாநகர சபைகள் சட்டத்தின் 4 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

--------------------------------------------------

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 40(ஊ) பிரிவிலிருந்து விலகி மத்திய சந்தை I, II மற்றும் III கட்டங்களின் கீழ் நிர்மாணிக்கப்பட்டு வரும் 123 புதிய கடைகள் மற்றும் மாளிகாபிட்டிய கடைகள் 12 என்பவற்றை குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை | • புதிய கடைகள் முதலாவது கொள்வனவாளருக்கு வழங்குவதற்காக சபை தீர்மானமொன்று எடுத்து அதற்காக கௌரவ ஆளுனரின் முன்னரக எழுத்துமூல அங்கீகாரமொன்று பெற்றுக்கொண்டுள்ள | • கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது அரச மதிப்பீட்டாளரின் மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். <br> • நீண்ட காலமாக |

| | | | |
|---|---|---|---|
| | எடுக்கப்பட்டிருந்தது. அவ்வாறே இந்த கடைகளை குத்தகைகளை வழங்கும் போது ஒரே தடவையில் அறவிடப்பட வேண்டிய தொகை (key money) பிரதான மதிப்பீட்டாளர் மூலம் மதிப்பீடு பெற்றுக் கொள்ளப் படாதிருந்ததுடன் 2020 யூன் 11 ஆந் திகதி பொதுச் சபையில் தீர்மானிக்கப்பட்ட மதிப்பீடு வெளிப்படைத் தன்மையில்லாத முதலாவது கொள்வனவாளருக்கு குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக பத்திரிகை அறிவித்தலொன்று வெளியிடப்பட்டு குத்தகை வழங்கப்பட்டிருந்தது. | தாக குறிப்பிடுகின்றேன்<br><br>• அரசின் மதிப்பீடு பெறுவதற்கு நீண்டகாலம் எடுப்பதால் அது கிடைக்கும் வரை பொதுச் சபையின் வருமான பரிசோதகரால் வழங்கப்பட்ட தற்காலிக மதிப்பீட்டின் பிரகாரம் குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | குத்தகைக்கு வழங்கு வதற்காக மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 40(1) இன் பிரகாரம் உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br><br>• கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டு முறையாக குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கௌரவ சனாதிபதி அவர்களின் முன் அங்கீகாரமின்றியும் அரசின் மதிப்பீடு இன்றியும் பொதுச் சபைக்குச் சொந்தமான வெலகதெர விளையாட்டரங்கு இலங்கை கிரிக்கெட் நிறுவனத்திற்கு 30 ஆண்டு காலத்திற்கு நீண்ட கால உடன்படிக்கையுடன் ரூபா 1,000 தொகைக்கும் போட்டிகளிலிருந்து உழைக்கும் வருமானம் கொடுப்பனவிற்கு உட்பட்டு குத்தகைக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. இந்த வெலகெதர விளையாட்டு மைதானம் குத்தகைக்கு வழங்கப்பட்டு 2007 ஆம் ஆண்டு முதல் 2021 ஆம் ஆண்டு வரை உழைக்கப்பட்ட வருமானம் மற்றும் செலவினம் தொடர்பான தகவல்கள் ஆவணப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் சபைக்கு கிடைக்கின்ற வருமானம் மாநகர சபை | 2021 திசெம்பர் 08 ஆந் திகதி குருணாகல் மாநகர சபையினால் நடாத்தப்பட்ட கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டதன் பிரகாரம் இது தொடர்பான விடயங்களை தேடிப்பார்ப்பதற்கு விளையாட்டு நிறுவனத்திடமிருந்து தகவல்கள் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன். | சபைக்குச் சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு வழங்கும் போது குறித்த அதிகாரத்தின் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். சொத்துக்களை குத்தகைக்கு வழங்கும் முதலாவது அரசின் மதிப்பீட்டாளரின் மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். உடன்படிக்கையின் பிரகாரம் குத்தகை அறவிடப்பட வேண்டும். |

நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டின் பிரகாரம் மாதாந்த வாடகை தீர்மானிக்கப்பட வேண்டியதுடன் மாநகர சபைக்குச் சொந்தமாக காணப்படும் 669 கடைகளில் அரசின் மதிப்பீடு இன்றி ரூபா 2,000 - 10,000 இற்கு இடைப்பட்ட வீச்சில் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தன. | மதிப்பீட்டிற்காக அரசின் விலைமதிப்புத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் இதுவரை 03 வியாபாரக் கடைத் தொகுதிகள் புதிய மதிப்பீடு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் பொதுச் சபை அங்கீகாரமும் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. | புதிய கடைகளின் மதிப்பீட காலரீதியாக நாளதுவரையாக்கப் பட்டு வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**3.4 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| புவனேக ஹொட்டல் அமைந்துள்ள கட்டிடத்தை உடைத்து சேதமேற்படுத்தியதற்காக சட்டத்தரணிகள் கட்டணம் அல்லது ஏனைய செலவினம் சபை நிதியத்திலிருந்து கொடுப்பனவு செய்வதற்கு நிதியேற்பாடுகள் இல்லாத போதும் சட்டத்தரணி மதியுரை பெற்றுக் கொள்வதற்காக ரூபா 2,180,000 தொகை கட்டிடத்தை உடைத்து வைத்தலுக்குரிய ரீட் முறைப்பாட்டிற்குரிய வழக்குகள் 5 இனை தொடருவதற்கு ரூபா 7,800,000 தொகையொன்றும் செலவிடப்பட்டிருந்ததுடன் இவ்வழக்கிற்காக கட்டணங்களாக ரூபா 1,647,500 தொகையும் செலவிடப்பட்டிருந்தது. | மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 40(ஓ) 309, 310 பிரிவுகளின் கீழ் வரும் சிறப்பான பாதுகாப்பு மாநகர முதல்வர் உட்பட உத்தியோகத்தருக்கு காணப்படுவதுடன் றிட் முறைப்பாட்டுக்கு எதிராக கௌரவ உயர் நீதிமன்றத்தில் சட்டமா அதிபரால் மேற்கொள்ளப்பட்ட மேன்முறையீடு கௌரவ மாநகர முதல்வர் உட்பட உத்தியோகத்தர்கள் வெளிப்படையாக மாநகர சபைக்காக செயற்பட்டுள்ளதால் அவர்களை பாதுகாப்பதற்கு சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் சட்டத்தரணிகள் கொடுப்பனவுகள் செய்யப்பட்டது சட்டரீதியாகும். | • சட்டச் செலவினம் செலவிடப்படும் போது சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br>• சபையின் ஆதனங் களுக்கு சேதத்தை ஏற்படுத்தி அதற்காக சபை நிதியத் திலிருந்து சட்டத்தரணி கட்டண செலவினங்கள் மேற்கொள் வதற்கு நிதியேற்பாடு செய்யப்படுவ தில்லை. |

## 3.5. வெளிப்படையான முறைகேடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 3.5.1 | நகர அபிவிருத்தி அதிகார சபையினதும் மாநகர சபையினதும் திட்டமிடல் குழுவின் அங்கீகாரமின்றி குருணாகல் பேருந்து நிறுத்துமிடத்தில் பயணிகளுக்கு இலகுவாக தரித்திரப்பதற்கு ஒதுக்கப்பட்டிருந்த வெற்று இடங்களில் 31 கடைகள் நிர்மாணிக்கப்பட்டிருந்தன. இதில் 18 கடைகள் குத்தகையாளர்களால் நிர்மாணிக்கப்படுவதற்கு சந்தர்ப்பம் அளிக்கப்பட்டிருந்தன. அத்துடன் 13 கடைகள் நிர்மாணிப்பதற்கு ரூபா 18,112,211 ஆன செலவினம் சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்தது. மேலும் டென்டர் கேள்வி முறைமைக்கு புறம்பாக அரசின் மதிப்பீட்டாளரினதும் கௌரவ சனாதிபதியின் அங்கீகாரமின்றி முறையற்ற விதத்தில் தெரிவு செய்யப்பட்ட நபர்களுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | • தனியார் முதலீட்டாளர்களால் செய்யப்பட்ட வேண்டுகோளை கருத்தில் கொண்டு கௌரவ மாநகர முதல்வரால் அதற்குரிய பெயர்ப்பட்டியலில் பொதுச் சபை அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.<br>• மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 229 ஆம் பிரிவின் பிரகாரம் மாநகர ஆணையாளருக்கு சொந்தமான பெறுகை தொடர்பான அதிகாரங்களின் கீழ் கேள்விச் சபையும் மாநகர சபையான இருப்பதால் தீர்மானிக்கப்பட்ட வகையில் பின்பற்றுவதற்கு நேர்ந்தது. | • நிர்மாணம் மேற்கொள்ளும் போது திட்டங்கள் அங்கீகரிக்கப் படல் வேண்டும்.<br>• கடைகளை குத்தகைக்கு வழங்கும் போது பிரதான மதிப்பீட்டாளர் மதிப்பீடு செய்து குத்தகை மற்றும் ஒரே தடவையில் செலுத்த வேண்டிய பணத்தை அறவிட வேண்டும்.<br>• அரசின் காணி மற்றும் கட்டிடங்களை குத்தகைக்கு வழங்கும் போது சனாதிபதி அவர்களின் அங்கீகாரம் பெற்றக் கொள்ளப்பட வேண்டும்.<br>• இந்த முறைகேட்டுக் குரிய உத்தியோகத்தர்கள் தொடர்பாக தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| 3.5.2 | மாநகர சபை மற்றும் அரசிற்குச் சொந்தமான உயர் வர்த்தக பெறுமதியுடன் கூடிய 55.48 பேர்ச் அளவான 8 காணிப் பகுதிகள் மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் 40(1)(ஊ) ஏற்பாடுகளிலிருந்து விலகி | சபை நியதிகளுக்கு இணங்க அக்காணி செயற்திறனாக பயன்படுத்துவதால் காணி குத்தகை வழங்குதல் | • மாநகர சபைக்கு கையளிக்கப்பட்ட கட்டளை ஒன்றின் மூலம் வழங்கப் பட்டுள்ள காணி சனாதிபதி |

| | | | |
|---|---|---|---|
| | முறையற்ற கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டு தனியார் தரப்பினருக்கு வழங்கப்பட்டிருந்தது. இக்காணி குத்தகைக்கு வழங்கும் போது அரசின் விலைமதிப்பீளாரின் மதிப்பீடின்றிற மேற்கொள்ளப்பட்டிருந்தது. | இடம்பெற்றிருந்த போதிலும் முறையான கையளிப்பு கட்டளை இல்லை என குறிப்பிடுகின்றேன்.<br>• இக்காணி கேள்வி நடைமுறை பின்பற்றி அல்லது சபையினால் தீர்மானிக்கப்பட்ட பிரசித்தி பெற்ற ஏல விற்பனையாக அல்லாத வேறு வகையில் விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரத்துடன் குத்தகைக்கு வழங்குதல் அல்லது விற்பனை செய்தல் மாநகர சபையால் மேற்கொள்ளக் கூடியதால் அதன் பிரகாரம் இக்காணி குத்தகைக்கு வழங்கப்பட்டுள்ளது.<br>• அரசின் மதிப்பீடு பெறுவதற்கு நீண்டகாலம் எடுப்பதால் அது கிடைக்கும் வரை மாநகர சபையின் வருமான பரிசோதகர்களால் வழங்கப்பட்ட தற்காலிக மதிப்பீட்டின் மீதி குத்தகை வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | அங்கீகாரமின்றி கையளிக்க முடியாது.<br>• காணி குத்தகைக்கு பெற்றுக் கொள்ள முன்னர் அரசின் மதிப்பீடு பெற்றுக் கொள்ளப்பட வேண்டும்.<br>• மாநரக சபையின் பயன்பாட்டிற்காக அத்தியாவசிய காணிகள் முறையாக கேள்வி நடைமுறை பின்பற்றப்பட்டு குத்தகைக்கு வழங்கப்படல் வேண்டும். |
| 3.5.3 | சபையின் தேவைப்பாட்டிற்காக எக்ஸ்சவேட்டர் இயந்திரம் ஒன்றை வாடகைக்கு எடுக்கும் போது கூறுவிலை சமர்ப்பித்த மூன்றில் இரண்டு நிறுவனங்கள் போலி நிறுவனங்களாக இருப்பதால் போட்டியின்றி இச்சேவையை பெற்றக் கொண்டு 2020 முதல் 2021 திசெம்பர் வரை ரூபா 17,943,500 செலுத்தப்பட்டிருந்தது. சபைக்குச் சொந்தமான எக்ஸ்சவேட்டர் இயந்திரத்தை வாடகைக்கு | மாநகர ஆணையாளர் மட்டுப்படுத்தப்பட்ட விலைகளை கோரி தற்காலிக சேவையை பெற்றுக் கொள்வதற்கு வழங்கப்பட்ட அங்கீகாரத்தின் பிரகாரம் மாநகர பொறியியலாளர் பரிந்துரை மீது மட்டுப்படுத்தப்பட்ட விலைகளின் கீழ் தற்காலிக வாடகையின் | • பெறுகை முறைமை பின்பற்றப்படும் போது வெளிப்படை யாகவும் மோசடி அற்றதாகவும் இருக்க வேண்டும்.<br>• மாநகர சபைக்குச் சொந்தமான |

| | | | |
|---|---|---|---|
| | வழங்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்ட காரணத்தினால் அவ்வியந்திரத்தை திருத்தம் செய்யாமல் நீண்டகாலமாக வாடகை கொடுப்பனவு செய்யப்பட்டு காணப்படுகின்றது. | அடிப்படையில் சேவையினை பெற்றக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | இயந்திரங்களை திருத்தி பயன்பாட்டிற்கு எடுப்பதற்கும் அத்தியவசிய செலவினத்தை குறைப்பதற்கும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br>• இது தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர் களுக்குரிய தாபன விதிக் கோவையின் பிரகாரம் ஒழுக்காற்று நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| 3.5.4 | குளச்சுற்று வளவுக் காணியில் வினோத நடவடிக்கைகளுக்காக 15 ஆண்டுகளாக குத்தகைக்கு வழங்கப்பட்டு அரசின் குத்தகை பெற்றுக் கொள்ளாத கௌரவ சனாதிபதி அவர்களின் அங்கீகாரத்துடனும் போலியாக சமர்ப்பிக்கப்பட்ட நகர சபையின் தொடர்பினை பேணிச் சென்ற விலை விபரங்கள் பெற்றுக் கொண்டு போட்டியின்றி குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | இரண்டு நிறுவனங்களிலிருந்து கூறு விலை சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் 2019 செப்தெம்பர் 3 ஆந் திகதி கேள்வியின் பிரகாரம் தொழில்நுட்ப மதிப்பீடு ஆகக்கூடிய விலை சமர்ப்பிக்கப்பட்ட நிறுவனத்திற்கு வழங்குதல் அங்கீகரிக்கப்பட்டு 15 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. | • மாநகர சபைக்குச் சொந்தமான சொத்துக்களை குத்தகைக்கு வழங்கும் போது பிரதான மதிப்பீட்டாளரின் மதிப்பீட்டை பெற்றுக் கொண்டு விலை தீர்மானிக்கப்பட வேண்டும்.<br>• மாநகர சபைக்குச் சொந்தமான காணியொன்றை குத்தகைக்கு வழங்கும் போது கௌரவ அமைச்சரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br>• வெளிப்படையாக டென்டர் நடைமுறையை பின்பற்றி குத்தகைக்கு வழங்கப்பட வேண்டும். |

3.6 **பெறுகை**

**--------------**

| | **கணக்காய்வு அவதானிப்பு**<br>------------------------------------------- | **சபையின் கருத்துரை**<br>------------------------------ | **பரிந்துரை**<br>---------------- |
|---|---|---|---|
| 3.6.1 | மாநகர சபையிடமிருந்து வெளியே நீர் இணைப்பினை வழங்குவதற்காக ரூபா 25,862,363 தொகையொன்று செலவிடப்பட்டிருந்தது. இச்செயற் திட்டத்திற்காக மதிப்பீடொன்று தயாரிக்கும் போது நீர்மானிகள் மற்றும் கொங்கிறீட் தூண்களின் விலைகள் கோரப்பட்டு குறைந்த விலையை பெற்று மதிப்பீடு தயாரிக்கப்படாதிருந்ததுடன் மேல் மதிப்பீடு தயாரிக்கப்பட்டு ரூபா 1,889,895 தொகை கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மதிப்பீடு தயாரிக்கும் போதும் பரீட்சிக்கும் போது பரீட்சிக்கும் உத்தியோகத்தர்களின் கையொப்பம் உத்தியோக முத்திரை அங்கீகரிக்கும் போது மாநகர பொறியியளலாளரின் உத்தியோகபூர்வ முத்திரை விடுபட்டிருந்தது. அந்நடவடிக்கைகளை எதிர்காலத்தில் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடுகின்றேன். | • பெறுகை நடவடிக்கைகள் ஆரம்பிப்பதற்கு முன்னர் கிரய மதிப்பீடொன்று முறையாக தயாரிக்கப்பட்டு குறித்த எல்லையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.<br>• கிரய மதிப்பீடு தயாரிக்கும் போது சந்தை விலை பெற்றுக் கொண்டு மதிப்பீடு தயாரிக்கப்படல் வேண்டும்.<br>• தொழில்நுட்ப உத்தியோகத்தர் உரிய வேலை விடயங்களை பரீட்சிப்பதன் பின்னர் கொடுப்பனவு செய்ய வேண்டும். |
| 3.6.2 | சபையால் பதிவு செய்யப்பட்டிருந்த வழங்குனர்களிடமிருந்து கூறுவிலையினை கோரி 2019, 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ரூபா 11,155,000 பெறுமதியான 5,000 நீர்மானிகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன.<br>• 2022 சனவரி 12 ஆந் திகதி கணக்காய்வினால் நகர சபை நீர்மானியின் கொள்வனவு செய்யும் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொண்ட விலை விபரங்களின் பிரகாரம் MEN வகையிலான அரை அங்குல நீர்மானியொன்று ரூபா 3,975 ஆக இருந்ததுடன் 2019 | • நகர சபை மூலம் இந்த நீர்மானிகள் 2019 ஆம் ஆண்டில் சந்தையில் காணப்பட்ட விலை விபரத்தின் அடிப்படையில் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது என குறிப்பிட விரும்புகின்றேன்.<br>• சந்தை விலைகளின் பிரகாரம் இக்கொள்வனவு மேற்கொள்ளப்பட்டுள் ளதாகவும் அது தொடர்பாக | • சட்டங்கள் விதிகளின் பிரகாரம் வழங்குனரின் பதிவு செய்யப்பட்டு முறையாக ஆவணங்கள் உட்படுத்த வேண்டும்.<br>• மாநகர சபைக்கு ஆகக்கூடிய நன்மை கிடைக்க கூடிய வகையில் குறைந்த |

| | | | |
|---|---|---|---|
| | ஆகஸ்ட் 02 ஆந் திகதி நகர சபையால் கொள்வனவு செய்யப்பட்டிருந்த நீர் மீற்றர் ஒன்றின் விலை ரூபா 4,350 ஆகும். அதன் பிரகாரம் ரூபா 1,125,000 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.<br>• 2020 ஆம் ஆண்டு 1000 நீர் மானிகளை கொள்வனவு செய்யும் போது குறைந்த விலை சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிறுவனத்தின் ரூபா 4,000 விலை நிராகரிக்கப்பட்டு ரூபா 4,350 இற்கு கொள்வனவு செய்த காரணத்தினால் நகர சபையால் ரூபா 350,000 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.<br>• 2021 ஆம் ஆண்டில் ½ நீர்மானி 1,000 கொள்வனவு செய்யப்பட்ட நிறுவனத்தி டமிருந்து கணக்காய்வினால் பெற்றுக் கொண்டு கூறுவிலை களின் பிரகாரம் கொள்வனவு செய்யப்பட்டிருந்த Baylan வகைக்குரிய துருக்கியில் உற்பத்தி செய்யப்பட்ட பித்தளை வகையிலான ½ அங்குல நீர்மானியின் விலை ரூபா 4,482 ஆகும். ஆகும். அதன் பிரகாரம் சந்தையில் காணப்படும் விலையை விட கூடுதலான விலையான ரூபா 5,500 இற்கு 1000 நீர்மானிகளை கொள்வனவு செய்வதற்காக ரூபா 1,108,000 தொகையொன்று கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இக்கேள்விக்காக சமர்ப்பித்த விலை விபரங்கள் மூலம் உறுதிப்படுத்துவதாக குறிப்பிடுகின்றேன். | விலையில் கொள்வனவு செய்வதற்கு இப்போதும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br>• மோசடியை தவிர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br>• பொதுவாக சந்தையில் விலைகள் அதிகரித்துள்ள தால் 2019 இற்கு ஒப்பாக 2022 இன் விலை அதிகமாகும். 2022 ஐ விட கூடிய விலைக்கு 2019 இல் கொள்வனவு செய்த அசாதாரண நிலையாகும். |
| 3.6.3 | கௌரவ நகர பிதாவின் உத்தியோகபூர்வ விடுதிக்காக ரூபா 4,992,000 பெறுமதியான தளபாட உபகரணங்களை கொள்வனவு செய்து திரைச்சீலை தைத்தல் மேற்கொண்ட நிறுவனமொன்றாக இருந்ததாகவும் இவ்வழங்குனர் உப குத்தகைகக்கு வழங்குதல் மூலம் உத்தியோகபூர்வ விடுதிக்கு தளபாட உபகரணங்கள் வழங்கப்பட்டிருந்தன. இந்த தளபாட உபகரணங்கள் 2021 திசெம்பர் 15 ஆந் திகதி வரை களஞ்சியத்திற்கு கையளிக்க நடவடிக்கை | இந்த பெறுகை ‘‘மாநகர முதல்வரின் உத்தியோகபூர்வ விடுதிக்கு தளபாடங்கள் கொள்வனவு’’ இற்காக நடாத்தப்பட்டதுடன் அது தளபாடங்களுக்குரிய கால எல்லைக்குள் நாட்டில் காணப்பட்ட பணவீக்கம் நிலைமையிலும் நாட்டில் காணப்பட்ட கொரோனா தொற்றுநிலைமையிலும் காலதாமதம் காரணமாக | • பெறுகை நடவடிக்கைகள் வெளிப்படையாக மேற்கொள்ள வேண்டும்.<br>• உடன்படிக்கை காலத்தில் பொருட்களை வழங்கி பூர்த்தி செய்யப்பட வேண்டியதடன் மேலதிகமாக செலுத்திய பணம் |

| | | |
|---|---|---|
| எடுக்கப்பட்டிருந்த போதிலும் 2021 திசெம்பர் 1 முதல் 2022 ஏப்ரல் 6 ஆந் திகதி வரை வழங்குதல் தாமதப்படுத்தப்பட்டு வழங்குனர் சமர்ப்பித்த கேள்வியின் விலையினை விட கூடுதலாக ரூபா 875,000 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இந்த மேலதிக கிரயம் அதாவது (20 சதவீதம்) ஏற்க நேர்ந்தது. | பரிசோதனைகளை மேற்கொண்டு அறவிடப்பட வேண்டும்.<br>• இடைத்தரகர் ஊடாக உபகரணங்கள் கொள்வனவு செய்யும் அதிக விலை கொடுப்பனவு செய்ய நேரும் நட்டத்தை குறைத்துக் கொள்ள வேண்டும். |

## 3.7 ஒப்பந்த நிர்வாகத்தின் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 3.7.1 | 2018 ஆம் ஆண்டின் மாநகர சபை நிதியத்தின் மூலம் இலுப்பகரே வீதியில் நீர்க் குழாய்களை பதிப்பதற்காக 2019 யூலை 22 ஆந் திகதி ரூபா 6,968,066 தொகைக்கு வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்தன. குறைந்த விலை நிராகரிக்கப்பட்டு வேலை வழங்குவது பொருத்தமென பரிந்துரைக்கப்பட்டு இருக்கையில் ரூபா 6,138,164 ஆன கூடுதலான விலைக்கு கேள்வி வழங்குவதற்கு நிதி தொடர்பான நிலையான குழு பரிந்துரை பொதுச் சபை அங்கீகரித்த காரணத்தினால் ரூபா 710,699 சபை நிதியத்திற்கு நட்டம் ஏற்பட்டிருந்தது.<br><br>• இச்செயற்திட்டத்தின் காலம் சந்தையில் காணப்படுகின்ற விலையின் பிரகாரம் 90 மில்லிமீற்றர் PNT 11 அளவின் PVC குழாய் ஒரு மீற்றரின் விலை (இலாப எல்லையுடன்) ரூபா 1,903 ஆகும். அதன் பிரகாரம் ஒரு மீற்றர் ஒன்றில் ரூபா 2,467 வீதம் மதிப்பீடு செய்த காரணத்தினால் ஒரு மீற்றருக்கு ரூபா 564 வீதம் 1,700 மீற்றர்களுக்கு ரூபா | • குறித்த செயற் திட்டத்தை விரைவில் பூர்த்தி செய்யும் தேவைப்பாட்டின் அடிப்படையில் இலுப்பைகெதர வீதியில் நீர்குழாய்களை பதிக்கும் நடவடிக்கைகளுக்கு கூடிய விலை சமர்ப்பித்த நிறுவனத்திற்கு பொதுச் சபை அங்கீகாரத்தின் அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது.<br>• மதிப்பீட்டு வேலை விடய இலக்கம் 05 இன் கீழ் ரூபா 2,467.50 என காண்பிக்கப்பட்டுள்ளது 3 அங்குல PVC குழாய் ஒன்றின் சந்தை பெறுமதியல்ல. அது கொள்வனவு செய்து அவ்விடத்திற்கு பொருத்தமான வகையில் கொண்டு வந்து பதித்தலுக்கான விலையாகும்.<br>• இலுப்பகெதர வீதியில் நீர்க்குழாய்களை | • PVC குழாய்க்காக மதிப்பீடு மாத்திரம் மேற் கொள்ளப்பட்டிருந் தால் அதன் பிரகாரம் கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.<br>• அளவீட்டுப் பத்திரம் மற்றும் பட்டியல் அடிப்படையில் தொழில்நுட்ப உத்தியோகத் தரின் சான்றிதழ் மீது கொடுப்பனவு செய்யப்பட வேண்டும்.<br>• பரிசோதனை நடாத்தி சபை நிதியத்திற்கு ஏற்பட்டுள்ள நட்டத்தை அறவிட வேண்டும்.<br><br>• பெறுகை சட்டங்கள் விதிகளின் பிரகாரம் பெறுகை மேற்கொள்ளப் பட |

| | | | |
|---|---|---|---|
| | 985,805 கூடுதலாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. கேள்விதாரரால் 5 ஆம் விடய இலக்கத்தின் கீழ் 3 அங்குல PVC குழாய்க்காக ஒரு மீற்றருக்கு ரூபா 2,778.28 ஆன விலை சமர்ப்பிக்கப்பட்டிருந்த தால் ரூபா 1,504,500 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.<br>• இலுப்பகெதர வீதி காபட் இடுவதாக 2018 செப்தெம்பர் 27 ஆந் திகதி இந்த மதிப்பீடு தயாரிக்கும் போது தெரிந்து கொண்டிருக்கையில் அந்த தேவைப்பாட்டிற்கு பொருந்தும் வகையில் மதிப்பீடு தயாரிக்காமை காரணமாக மீண்டும் மண் அகற்றுதல் மற்றும் குறித்த செலவினங்களுக்காக செலவிடப்பட்ட ரூபா 760,797 தொகை பயனற்ற செலவினமொன்றாக அவதானிக்கப்பட்டது.<br>• 3 ஆம் இலக்க வேலை விடயத்தின் பிரகாரம் 0-1500 அளவில் ஆழத்தில் மண் வெட்டுவதற்காக BSR B7 இன் பிரகாரம் ஒரு கனமீற்றர் ரூபா 1,152 வீதம் 577.50 மீற்றருக்கு ரூபா 665,280 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. எவ்வாறயினும் இந்த வேலை விடயம் இயந்திரம் மூலம் மேற்கொண்டு உண்மையான விலை விகிதம் கனமீற்றருக்காக ரூபா 196.60 ஆக இருப்பதால் ஒரு கனமீற்றர் ரூபா 955.40 வீதம் 577.5 கனமீற்றர்களுக்கு ரூபா 551,743 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | பதிப்பதற்கு மதிப்பீடு செய்யும் போது இலுப்பைகெதர வீதி காபட் இடும் வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது டன் அது தொடர்பாக உத்தியோகத்தர் அறிந்திருந்ததுடன் அப்போதைய இடத்திற்கு பொருத்தமான வகையில் பொறியியலாளர் அறிவுறுத்தலின் பிரகாரம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தது. | வேண்டும்.<br>• திட்டமிட்ட நடவடிக்கைகள் செய்வதால் விளைவற்ற செலவினங் களை தடுக்க வேண்டும். பரிசோதனை நடாத்தி மாநகர சபை நிதியத்திற்கு ஏற்பட்ட நட்டத்தை அறவிட வேண்டும் |
| 3.7.2 | 2021 ஆம் ஆண்டின் மாநகர சபையின் நிதிஏற்பாட்டின் பேரில் சுந்தராபொல திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவ நிலையத்தின் திருத்த வேலைகளுக்காக ரூபா 2,610,983 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டிருந்தது. இச்செயற்திட்டம் நவம்பர் 22 ஆந் | இச்செயற்திட்டத்தை நிறைவேற்றுறுவதற்காக அவ்வவ்போது சந்தர்ப்பங்களில் காலம் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்த நிறுவனத்தின் மூலம் இச்செயற்திட்டத்தை முழுமையாக பூர்த்தி | • உடன்படிக்கை காலத்தில் செயற்திட்டம் நிறைவேற்றப்பட வேண்டும்.<br>• ஒப்பந்தக்காரர் செயற்திறனற்ற வகையில் |

| | | | |
|---|---|---|---|
| | திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2022 பெப்ரவரி 22 வரை செயற்திட்டம் நீடிக்கப்பட்டிருந்த போதிலும் 2022 சனவரி 31 ஆந் திகதி செயற்திட்டத்தை பரீட்சித்த போது ரூபா 713,787 பெறுமதியான 07 வேலை விடயங்கள் மாத்திரம் நிறைவேற்றப்பட்டிருந்தன. உடன்படிக்கை செய்து இணங்கப்பட்ட பெறுமதியில் மேலும் மேற்கொள்ளாத மேல்மாடியின் நிர்மாணம் மற்றும் மலசலகூட நிர்மாணத்திற்குரிய 38 உருப்படிகள் பூர்த்தி செய்யாத வேலைகளின் பெறுமதி ரூபா 2,203,452 ஆக இருந்ததுடன் அது மதிப்பிடப்பட்ட பெறுமதியில் 48 சதவீதமாக இருந்தது. | செய்யும் போது குறைபாடுகள் இடம்பெற்றுள்ளதாக தென்பட்டதால் இவ்வேலை விடயங்கள் தற்போது மிகைஅறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | நடவடிக்கை எடுத்திருந்தால் மீண்டும் நிர்மாண வேலைகள் மேற் கொள்வதற்கு சந்தர்ப்பம் வழங்காமல் கறுப்பு பட்டியலில் உள்ளடக்கப்பட வேண்டும். |
| 3.7.3 | 2021 ஆம் ஆண்டில் மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் நிதியேற்பாட்டின் பேரில் சுந்தராபொல திண்மக்கழிவு முகாமைத்துவ நிலையத்தின் நிர்வாகக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக ரூபா 10,450,462 பட்டியலொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.<br><br>• அளவீட்டுப் பத்திரம் மற்றும் பட்டியலின் பிரகாரம் C10 மற்றும் C24 உருப்படிகள் முழுமையாக நிறைவேற்றப் படாதிருக்கையில் ரூபா 241,592 ஆன பணம் கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. 3.7 ஆம் இலக்க உருப்படியின் பிரகாரம் அத்திவாரத்திற்கு மண் இட்டு நிரப்புவதற்காக ரூபா 188,428 கொடுப்பனவு செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த போதும் இந்த வேலையும் முழுமையாக நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. Tie Beams தூண்கள் இடப்படாதிருந்த போதும் இதற்காக கம்பி இடப்பட்டுள்ளதாக குறிப்பிட்டு 1815.94 kg இற்காக ரூபா 687,365 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | மாகாண சபைகள் அமைச்சின் திண்மக் கழிவு முகாமைத்துவ உதவி நிலையத்தின் மதியுரை பொறியியலாளரின் விடயங்களை விசாரித்து வாய்மொழி மூலம் கிடைத்த ஆலோசனைகளின் பிரகாரம் நிதியேற்பாடு மீள அனுப்பப்படாத வகையில் பட்டியல் தயாரிப்பதற்கு சமர்ப்பிக்கப்பட்டது. | • செய்யப்படாத வேலைகளுக் காகவும் போலி பட்டியல்களை தயாரிக்க கூடாது.<br>• உடன்படிக்கை செய்யப்பட்ட காலப் பகுதிக்குள் செயற் திட்டங்களை நிறைவேற்றிக் கொண்டு பணத்தை மீள் நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| 3.7.4 | மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி மன்ற இராஜாங்க அமைச்சின் நிதியேற்பாட்டின் பெயரில் சுந்தராபொல கழிவுப் பொருள் நிலையத்தின் மலக்கழிவுப் பொருள் சுத்திகரிப்பு முறையை தாபிப்பதற்காக நிர்மாண மற்றும் திட்டமிடல் முறைமை (Design & Build) கீழ் நிர்மாணிப்பதற்கு 2021 ஒக்தோபர் 22 ஆந் திகதி ஒப்பந்த நிறுவனமொன்றுடன் ரூபா 49,500,000 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டு ரூபா 9,635,093 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. ஒரு கேள்வி மாத்திரம் மதிப்பீடு செய்யப்பட்ட காரணத்தினால் தொழில்நுட்ப மற்றும் நிதி இயலுமை மற்றும் அரசிற்கு மிகவும் சிக்கனமான செயற்திட்டத்தை தெரிவு செய்யும் சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.<br><br>நான்கு தாங்கிகளை நிர்மாணிப்பதற்காக 15 மீற்றர் நீளம் 9 மீற்றர் அகலம் மற்றும் --- மீற்றர் ஆழமான குழியொன்று மாத்திரம் தோன்றி அதற்காக அளவீட்டுப் பத்திரம் சமர்ப்பிக்கப்டாதிருக்கையில் ரூபா 2,594,000 ஆன தொகையும் ரூபா 9,635,093 பெறுமதியான இயந்திர உபகரணங்கள் சுந்தராபொல வளவில் இடப்பட்டிருந்ததுடன் அந்த உபகரணங்களுக்காக பணம் செலுத்தி செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. | உடன்படிக்கை பிரகாரம் குறித்த ஒப்பந்த நிறுவனத்தினால் ஒப்பந்தத்திற்குரிய உருப்படிகளை கொள்வனவு செய்து அதற்குரிய இயந்திர மணித்தியாலத்துடன் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.<br><br>கொவிட் தொற்று நிலைமை சீராற்ற காலநிலை மற்றும் மூலப்பொருட்கள் பற்றாக்குறை காரணமாக சனவரி மாதம் 22 ஆந் திகதி முதல் 50 நாட்களுக்கு காலம் நீடிக்கப்பட்டுள்ளது. உரிய காலப்பகுதியில் பூர்த்தி செய்வதற்கு முடியவில்லை. | • பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் ஒப்பந்த முறைமை தெரிவு செய்து மேற்கொள்ள வேண்டும்.<br>• பயனற்ற செயற் திட்டங்களுக் காக கொள்வனவு செய்யப்பட்ட உதிரிப் பாகங்கள் வேலைத் தளத்தில் களஞ்சியப்படுத்தப் பட்டு அரசின் பணம் ஒப்பந்தக் காரருக்கு செலுத்தப்படக் கூடாது.<br>• உடன்படிக்கை காலத்தில் செயற்திட்டத்தை நிறைவு செய்வதற்கு பொறுப்பான உத்தியோகத்தர் நடவடிக்கை எடுத்து கொடுப்பனவு மேற்கொள்ளப் பட வேண்டும். |
| 3.7.5 | 2018 ஆம் ஆண்டில் மாநகர சபை நிதி ஏற்பாட்டின் பேரில் மாளிகாபிட்டிய விளையாட்டரங்கை சர்வதேச மட்டத்தில் அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 53,383,790 ஆன மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு ஒப்பந்த நிறுவனமொன்றுடன் ரூபா 53,330,591 தொகைக்கு உடன்படிக்கை செய்து ரூபா 46,470,733 தொகை கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இச்செயற்திட்டத்திற்குரிய கோவைகள் மற்றும் பௌதீக பரிசோதனைகளின் போது ரூபா 4,636,580 ஆன ஆகக்குறைந்த கேள்வி நிராகரிக்கப்பட்டு ரூபா | புற்கள் நடுவதற்காக திட்டமிடப்பட்ட வேலை விடயத்தின் விடயப்பரப்பு திருத்தம் செய்யப்பட்டமையால் அதற்காக புதிய அலகொன்று கொள்வனவு செய்வதற்கு தீர்மானிக்கப்பட்டது. விளையாட்டரங்கில் புற்களை நடுவதற்காக விலை பகுப்பாய்வின் கீழ் சட்டரீதியான ஒப்பந்த நிறுவனமொன்றுடன் இணங்கப்பட்டது. அதற்காக அந்நிறுவனத்தின் மூலம் | • மதிப்பீட்டினை முறையாக தயாரிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.<br>• மதிப்பீட்டு அளவை மிகைத்து கொடுப்பனவு செய்யும் அதற்காக அங்கீகாரம் பெற்றுக் கொண்டும் உள்ளவாறான அளவீட்டுபத்திரத்தி ன் பேரில் கொடுப்பனவு |

| | | | |
|---|---|---|---|
| | 53,330,591 இற்கு கேள்வி சமர்ப்பித்த நிறுவனத்திற்கு கேள்வி அளிப்புச் செய்யப்பட்டமையால் ரூபா 6,394,011 ஆன நட்டம் சபை நிதியத்திற்கு ஏற்பட்டிருந்தது.<br><br>• ஒரு மீற்றர் மண் இயந்திர பொறிகளை பயன்படுத்தி வெட்டுவதற்காக ஏற்றுக் கொள்ளப்பட்ட நியம விலையின் பிரகாரம் ரூபா 198 ஆக இருந்த போதும் இச்செயற்திட்டத்தில் மண் வெட்டுவதற்காக ஒரு கனமீற்றருக்காக ரூபா 800 ஆக கொடுப்பனவு செய்யப்பட்ட காரணத்தினால் 1,518.62 கனமீற்றர் வெட்டுவதற்காக ரூபா 602 வீதம் ரூபா 914,209 கூடுதலாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது.<br>• பொறியியலாளர் மதிப்பீட்டின் மூலம் புற்களை நடுவதற்காக தயாரிக்கப்பட்ட ரூபா 8,641,200 ஆன மதிப்பீடு நீக்கப்பட்டு மேலதிக விடயமொன்றாக ரூபா 24,535,000 ஆன செலவின மொன்று மேற்கொள்ளப் பட்டிருந்ததுடன் அது செலவினத்தை விட ரூபா 15,893,800 ஆக அதிகரித்திருந்தது. இவ்வேலை விடயத்திற்காக ஒப்பந்த நிறுவனத்தினால் வேறொரு நிறுவனத்திற்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் இவ்வாறு அதிக பணத் தொகையொன்று நேரடியாக நகர சபையால் பெறுகை நடவடிக்கைகள் மேற்கொண்டு வழங்கப்படாமை காரணமாக தரத்துடன் கூடிய புற்கள் இல்லாததால் சிக்கல் இருந்ததாக கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | விளையாட்டரங்கில் புற்களை நடுவதற்காக அனுபவமுள்ள நிறுவனமொன்றின் கீழ் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | செய்ய வேண்டும்.<br>• மண் வெட்டிய முறையின் பிரகாரம் விலை விகித அடிப்படையில் கொடுப்பனவு செய்ய வேண்டும்.<br>• குறைநிரப்பு வேலை மதிப்பீட்டுப் பெறுமதியில் 10 சதவீத வீச்சில் மேற் கொள்ளப்பட வேண்டும். ஒப்பந்த பெறுமதியில் நூற்றுக்கு 45 வீதமாக இருப்பதால் நகர சபை நேரடியாக ஒப்பந்தங்களை வழங்கக்கூடிய இவ்வேலை விடயம் உப ஒப்பந்தமொன்றாக வழங்க கூடாது. |
| 3.7.6 | குருணாகல் மாநகர சபைக்குச் சொந்தமான மத்திய சந்தை I மற்றும் II கட்டங்களாக ஒவ்வொரு நிறுவனமொன்றுடன் உடன்படிக்கை செய்து முதலாவது கட்ட செயற்திட்டம் ரூபா 948,518,334 | • பெறுகை விளம்பரத்தில் உள்ளடக்கப்பட்ட தகைமையை முன்மொழிவு செய்யப்படுகின்ற விடயங்களுக்குரிய | • மதிப்பீட்டு தொகையை விட 40 சதவீதமான அளவிலான விலகலொன்று காணப்படுவதால் |

| | | |
|---|---|---|
| இற்கும் இரண்டாம் கட்டம் ரூபா 1,231,001,682 தொகைக்கும் உடன்படிக்கை செய்து செயற்திட்டம் நிர்மாணிக்கப்பட்டு காணப்பட்டதுடன் 1 ஆம் கட்டம் ரூபா 493,501,792 தொகை மற்றும் 2 ஆவது கட்டம் ரூபா 1,420,353,223 கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | இச்செயற்திட்டத்தின் பெறுகை பிரிவினால் தீர்மானிக்கப்பட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டு இப்பெறுகை அறிவித்தல் தயாரிக்கப்பட்டது. | மீண்டும் பெறுகை செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| • முதலாவது கட்ட நிர்மாணத்தின் போது பெறுகை வழிகாட்டிக் கோவையின் 5.3.2 பிரிவின் பிரகாரம் செய்தித்தாள் அறிவித்தலில் வேலை விடயம் பிரதான கூறாக காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.<br>• முதலாவது கட்டத்தின் கீழ் இரண்டு கேள்விதாரர்களும் பெறுகை ஆவணங்களை 2019 செப்தெம்பர் 8 ஆந் திகதி ஒரே நாளிலியே ஆவணங்களை பெற்றுக் கொண்டதாகவும் வழங்குனர்கள் கேள்வி வைப்புத் தொகையை 2019 செப்தெம்பர் 8 ஆந் திகதி ஒரே தடவையில் செலுத்தப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. இதன் பிரகாரம் பெறுகையின் ஒழுக்கம் நிறைவேற்றப்படாமை காரணமாக கணக்காய்வின் போது சிக்கலான விடயமாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இரண்டு கேள்விகளிலும் எழுத்து இலக்கம் என்பன சமமான சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.<br>• மதிப்பீட்டை பரீட்சிப்பிற்காக குழுவொன்று நியமிப்பதன் அடிப்படை இலக்கு பாரிய விலகலை ஆய்வு செய்து அறிக்கையொன்றை பெற்றுக் கொள்ள வேண்டியதாக இருந்த போதிலும் இவ்விலகல் தொடர்பாக போதிய ஆய்வொன்று மேற்கொள்ளப் பட்டு அறிக்கையொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. இக்குழுவினால் இரண்டு உருப்படிகளின் விலை ரூபா 68,392,500 முதல் ரூபா 226,000,000 வரை அதிகரிக்கப்பட்டிருந்தது. | • குருணாகல் மாநகர சபையால் திருத்திய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டு வடமேல் பொறியியலாளர் திணைக்களத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொண்டு செயற் திட்டத்தின் எஞ்சிய நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் அதன் பின்னர் ஒப்பந்தம் வழங்கப்பட்டது. | • மதிப்பீட்டு விலகல் தொடர்பாக ஒப்பந்தக்கார ருடன் கலந்துரை யாடி மதிப்பீட்டுத் தொகைக்கு இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ள வேண்டும். |

- II ஆம் கட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி பரீட்சித்த போது பெறுகை வழிகாட்டல் கோவையின் 7.9.2 பிரகாரம் விரிவான கேள்வி மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் 142 உருப்படிகள் பொறியியலாளர் மதிப்பீட்டை விட 19 சதவீதம் முதல் 659 வரை விலகலுடன் ரூபா 85,348,311 கூடுதலான தொகைக்கு ஒப்பந்தம் கையளிக்கப்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.